
இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்

40 ஆண்டுகளுக்கு முன்பு, அக்டோபர் 27, 1986 அன்று, திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்கள், இத்தாலியின் மையப் பகுதியில் உள்ள அசிசி நகரில் நடைபெற்ற அமைதிக்கான உலகப் பிரார்த்தனை நாளில் பங்கேற்றார். உலக வரலாற்றிலேயே முதன்முறையாக, உலக சமயங்களின் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றாக இணைந்து அமைதிக்காகப் செபிக்க திருத்தந்தையால் அழைக்கப்பட்டனர்.

உலக அமைதிப் பிரார்த்தனையின் 40 ஆம் ஆண்டு நிறைவு!



அக்டோபர் 25 முதல் 27 வரை, இத்தாலியிலுள்ள அசிசி நகரில் பல்வேறு சமயங்கள் பங்கேற்கும் அமைதிப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. புனித இரண்டாம் ஜான் பால் அவர்களால் தொடங்கப்பட்ட இந்த வரலாற்று சிறப்புமிக்க ஆண்டுக் கூட்டத்தின் 40 ஆம் ஆண்டு நிறைவு விழா இதுவாகும்.

40 ஆண்டுகளுக்கு முன்பு, அக்டோபர் 27, 1986 அன்று, திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்கள், இத்தாலியின் மையப் பகுதியில் உள்ள அசிசி நகரில் நடைபெற்ற அமைதிக்கான உலகப் பிரார்த்தனை நாளில் பங்கேற்றார். உலக வரலாற்றிலேயே முதன்முறையாக, உலக சமயங்களின் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றாக இணைந்து அமைதிக்காகப் செபிக்க திருத்தந்தையால் அழைக்கப்பட்டனர்.

அந்த வரலாற்று நிகழ்வால் ஈர்க்கப்பட்டவர்களில் 'சான்ட் எஜிடியோ' (Sant'Egidio) என்ற கத்தோலிக்கப் பொதுநிலையினர் அமைப்பும் ஒன்றாகும். அன்று முதல், 'அசிசி ஆன்மீக உணர்வை' (Spirit of Assisi) ஐரோப்பா முழுவதிலும் மற்றும் உலகின் பிற பகுதிகளிலும் ஒவ்வொரு ஆண்டும் இவ்வமைப்பு ஊக்குவித்து வருகிறது.

இவ்வாண்டு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் திருத்தந்தை பதினான்காம் லியோ கலந்து கொள்கிறார். "திருத்தந்தை மீண்டும் அசிசி நகருக்கு வருகை தருவது குறித்து நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்," என்று உள்ளூர் ஆயர் மான்சிஞ்ஞோர் ஃபெலிஸ் அக்ரோக்கா தெரிவித்துள்ளார். "திருத்தந்தையின் வருகையும், பிற சமயத் தலைவர்களின் பங்கேற்பும், அனைத்து விதமான வன்முறைகளுக்கும் எதிராக நாம் அனைவரும் இணைந்து பயணிக்கும் பாதையை மேலும் வலுப்படுத்தும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்," என்றும் அவர் கூறினார்.

சமயங்களின் அமைதிப் பணி

அசிசி நகரில் அக்டோபர் 25 முதல் 27 வரை நடைபெறவுள்ள இந்த 2026 ஆம் ஆண்டு நிகழ்வு, முதலாவது கூட்டத்தின் 40 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. இது குறித்த அறிமுகக் கூட்டம் திருப்பீடத்தின் (வத்திகான்) செய்தித் தொடர்புக் குழுவின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வை சான்ட் எஜிடியோ அமைப்பின் தலைவர் மார்கோ இம்பாலியாசோ அறிமுகப்படுத்திப் பேசினார். அப்போது அவர், "அசிசி நகரில், சமயங்களுக்கு இடையேயான உரையாடலுக்கு ஒரு புதிய மற்றும் படைப்பாற்றல் மிக்க பாதை பிறந்தது. கடந்த 40 ஆண்டுகளில், அந்த ஆன்மீக உணர்வு இந்த உலகமயமாக்கப்பட்ட சூழலில் மிக முக்கியமான ஒன்றாக மாறியுள்ளது," என்று விளக்கினார்.

இன்றைய உலகம் "மிகவும் அச்சத்தோடும், பயத்தோடும், பிரிவினைகளாலும், தேசியவாதம் மற்றும் இனவெறியாலும் பிளவுபட்டு நிற்கிறது. எனவே, இந்த உலகத்திற்கு மீண்டும் ஒருமைப்பாடு தேவைப்படுகிறது," என்று அவர் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், "உலகில் ஆன்மீக ரீதியிலான ஒருமைப்பாடு இல்லையென்றால், மனிதர்கள் அனைவரும் ஒன்றிணைவதும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறுவது போல நம்மை 'அனைவரும் சகோதர சகோதரிகள்' என்று நினைத்துப் பார்ப்பதும் கடினமாகிவிடும்," என்றார்.

தமிழாக்கம் ஹெரால்டு

"ஆண்டவரே, இன்னும் எத்துணை காலம்?" திருத்தந்தை லியோ

காசா நகரில் உள்ள திருக்குடும்பக் கத்தோலிக்கப் பங்குத்தந்தைக்குத் திருத்தந்தை பதினான்காம் லியோ அனுப்பியுள்ள இரங்கல் செய்தியில், இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் இரு கிறிஸ்தவப் பெண்கள் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டதற்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் இரண்டு ஆர்த்தடாக்ஸ் பிரிவுப் பெண்கள் உட்பட ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பிறகு, திருத்தந்தை பதினான்காம் லியோ காசாவின் கிறிஸ்தவ சமூகத்திற்குத் தனது துயரத்தைப் பகிர்ந்து கொண்டு, அவர்களுக்காகத் தொடர்ந்து செபிப்பதாக உறுதியளித்துள்ளார்.

மேற்கு காசா நகரின் ரிமால் (Rimal) பகுதியில் அமைந்துள்ள ஒரு குழியிருப்பு கட்டிடத்தின் மீது சனிக்கிழமை (அக்டோபர் 3) அதிகாலையில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், பலர் படுகாயமடைந்தனர்.

"ஆண்டவரே, இன்னும் எத்துணை காலம்?"

காசாவில் உள்ள திருக்குடும்பக் கோவில் பங்குத்தந்தை கபிரியேல் ரொமானெல்லிக்கு (Fr. Gabriel Romanelli) அனுப்பிய செய்தியில், திருத்தந்தை லியோ உயிரிழந்தவர்களுக்காகச் செபித்ததுடன், அவரது ஆன்மீகப் பணிக்கு நன்றியும் தெரிவித்தார்.

"மைசா மற்றும் மேரியின் மரணம் குறித்த வேதனையான செய்தியைக் கேட்டதிலிருந்து, அவர்களுக்காகவும், அவர்களின் குடும்பத்தினருக்காகவும், காசா முழுமைக்குமாகவும் நான் இறைவனிடம் செபித்து வருகிறேன். ஆண்டவரே, இன்னும் எத்துணை காலம் இந்நிலை நீடிக்கும்?" என்று அவர் எழுதியுள்ளார்.

"இந்தக் கடினமான சூழலிலும் பங்கையும், அமைதியுடன் வாழ விரும்பும் ஏராளமான மக்களையும் அரவணைத்துச் செல்வதற்கு நன்றி. எனது ஆசீர்வாதங்களும் அன்பான வாழ்த்துகளும்" என்று திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, எருசலேமின் லத்தீன் ஆயர் கர்தினால் பியர்பாத்திஸ்தா பிஸாபல்லா (Cardinal Pierbattista Pizzaballa), கத்தோலிக்கக் குருக்கள் மற்றும் மறைமாவட்டம் சார்பில் தனது இரங்கலைத் தெரிவித்ததுடன், அப்பாவி மக்களின் உயிர்கள் பலியாவதற்குக் கடும் கண்டனம் தெரிவித்தார்.

மோசமடையும் மானுட அவலங்கள்

அல்-ஷிஃபா மருத்துவமனை வட்டாரங்களின்படி, தாக்குதலில் காயமடைந்தவர்களின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.ஹமாஸ் அமைப்பின் கட்டளை மையம் அல்லது அதன் தலைவரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

அதேவேளையில், பங்குத்தந்தை ரொமானெல்லி மற்றும் புனித அன்னை தெரசா அவர்களின் 'அன்பின் சகோதரிகள்' (Missionaries of Charity) துறவற சபையினரின் தலைமையில் இயங்கும் உள்ளூர் திருஅவை, பாதுகாப்பான இடம் எதுவுமின்றி தவிக்கும் நூற்றுக்கணக்கான அகதிகளுக்குத் தொடர்ந்து உதவி வருகிறது. அக்டோபர் 7 வன்முறைச் சம்பவங்களின் நினைவு

→

திருமண அன்பு என்பது வாழ்நாள் முழுவதற்குமான சோர்வில்லாத, நம்பிக்கையான 'ஆம்' என்னும் அர்ப்பணிப்பாகும்!

"யூகேட்: என்றுமுள அன்பு" (YOUCAT: Love Forever) என்னும் புதிய புத்தகத்தின் முன்னுரையைத் திருத்தந்தை பதினான்காம் லியோ எழுதியுள்ளார். கத்தோலிக்க விசுவாசத்தின் வெளிச்சத்தில் அன்பு, உறவுகள் மற்றும் திருமணம் குறித்து இளைஞர்கள் சிந்திக்கவும் வழிகாட்டவும் இப்புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை பதினான்காம் லியோ எழுதிய முன்னுரை:

அன்பார்ந்த இளம் நண்பர்களே, உங்கள் இதயம் அன்பிற்காக இயங்குகிறது. ஆழமான, தியாகம் நிறைந்த, நிலையான ஒரு அன்பையே அது விரும்புகிறது. இந்த ஏக்கம் ஏதோ எதிர்பாராமல் வந்ததல்ல; நீங்கள் அன்பிற்காகவே படைக்கப்பட்டுள்ளீர்கள் என்பதன் அடையாளம் இது. என் ஆயர் முத்திரையில் (coat of arms) அம்பு தாங்கிய இதயத்தோடு சித்தரிக்கப்பட்டுள்ள புனித அகஸ்டின், "இறைவா! உம்மில் ஓய்வு கொள்ளும் வரை எங்கள் இதயம் அமைதியடைவதில்லை" (Confessions 1:1) என்று கூறியிருந்தார். நாம் இறைவனோடு ஒன்றிணையும் போது, அவர் நம் ஆன்மாவில் பொழியும் திவ்விய அன்பின் ஏக்கத்தையே புனித அகஸ்டின் இவ்வாறு வெளிப்படுத்தினார். ஆம், மனித அன்பில் கடவுளே பிரசன்னமாகி அதை உருமாற்ற முடியும். அப்போது, அவர் அன்பு செய்வது போல - சேவை மனப்பான்மையோடு, தாராள தியாகத்தோடு, மன்னிக்கும் குணத்தோடு அன்பு செய்யும் ஆற்றலை நமக்குத் தருகிறார். ஏனெனில், கடவுள் அன்பாகவே இருக்கிறார்; அவரையோ, உங்களோடு வாழும் மனிதர்களையோ நீங்கள் அன்பு செய்யவே அவர் உங்களைப் படைத்துள்ளார்.

மனித அன்பின் அனைத்து வடிவங்களிலும், ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான அன்பு மிகச் சிறப்பு வாய்ந்த இடத்தைப் பெறுகிறது. அது ஒரு அம்பைப் போல இதயத்தில் மிக வேகமாகவும் ஆழமாகவும் தைக்கக்கூடும். ஆனால் உண்மையான அன்பு அத்துடன் நின்றுவிடுவதில்லை. அது வெறும் தற்காலிகமான, கணநேர உணர்ச்சிப்பெருக்கு அல்ல. அதையும் தாண்டியது. அது மற்றவருக்குச் செய்யும் ஆழமான அர்ப்பணிப்பு; ஒரு முடிவு, ஒரு பயணம் மற்றும் வாழ்நாள் முழுவதற்குமான உடன்படிக்கை. "கடவுளின் நித்திய மகிமையை - அன்பாகவே இருக்கும் கடவுளை வெளிப்படுத்தும்போது மட்டுமே அன்பு உண்மையானதாகவும், என்றும் நிலைத்திருப்பதாகவும் அமைகிறது (1 யோவான் 4:8). பரஸ்பர நம்பிக்கை மற்றும் குடும்ப வாழ்க்கைக்கும் ஆன்மீகத் துறவற அழைப்பிற்கும் துடிதுடிக்கும் இதயமாக விளங்கும் 'என்றும் நிலைத்திருக்கும்' வாக்குறுதியின் மீதே வலுவான, பயனுள்ள உறவுகள் கட்டியெழுப்பப்படுகின்றன". இந்த அன்பு முதலில், "கிறிஸ்து அன்பு செய்தது போல நான் எப்படி அன்பு செய்வது?" (யோவான் 15:12) என்று தான் கேட்குமே தவிர, "இதனால் எனக்கு என்ன கிடைக்கும்?" என்ற கேள்வியை கடைசி இடத்திலேயே வைக்கும். திருமணம் என்பது கடவுளின் மர்மத்தையே நமக்கு வெளிப்படுத்துகிறது. ஒரு ஆணும் பெண்ணும் அன்பில் தங்களை முழுமையாக ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுக்கும் போது, கடவுள் அவர்கள் மத்தியில் வாழத் தொடங்குகிறார். அவர்களின் விசுவாசம், அவர்களின் மன்னிப்பு, நன்மையை நோக்கி அவர்களின் அன்றாட முயற்சி ஆகியவை தன் திருஅவையின் மீது கிறிஸ்து கொண்டுள்ள அன்பின் பிரதிபலிப்பாகும். இது ஏதோ கற்பனையான மிகைப்படுத்தல் போலத் தோன்றலாம், ஆனால் இதுவே நிஜத்தின் ஆழமான உண்மையாகும்: "ஒன்றாக இருக்கும் அவரில், நாமும் ஒன்றாக இருக்கிறோம்" (புனித அகஸ்டின், திருப்பாடல்கள் 127 உரை).

அன்பார்ந்த இளைஞர்களே, கடவுள் உங்களை இந்த மகத்தான அன்பிற்கு அழைக்கிறார். இதன் ஆழத்தைக் கண்டு பயப்படாதீர்கள்! ஏனெனில், நீங்கள் அழைக்கப்பட்டுள்ள அன்பு, சவால்களை வெல்லும் அளவுக்கு வலிமையானது; உங்கள் வாழ்நாள் முழுவதையும் தாங்கிப்பிடிக்கும் அளவுக்கு மகத்தானது. அது பரிபூரணமானது அல்ல என்றாலும், விசுவாசத்தின் ஒளியில் வளரக்கூடியது. உண்மையான அன்பு கடவுளின் கொடை; அதை நாமாகவே உருவாக்கிவிட முடியாது. மனித அன்பு பெரும்பாலும் சுயநல ஆசைகளால் கறைபடும் வேளையில், கடவுளின் அன்போ சுயநலமற்றது, நீடிய பொறுமையுள்ளது, தயவுள்ளது; புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நற்பண்புகளையும் கொண்டது (1 கொரிந்தியர் 13).

இயேசு கிறிஸ்துவின் சிலுவையை நோக்கும்போது, உண்மையான அன்பின் மிக அழகிய உருவத்தை நாம் காண்கிறோம். நமக்காகத் தன் உயிரையே கொடுக்கும் அளவுக்கு அவர் நம்மை நேசித்தார். இதுவே கிறிஸ்தவத்தின் "டி.என்.ஏ" (DNA) மற்றும் கிறிஸ்துவின் கட்டளையாகும்: "நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவரோடு ஒருவர் அன்பு செலுத்துங்கள். தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு எவரிடமும் இல்லை" (யோவான் 15:12-13).

"யூகேட்: என்றுமுள அன்பு" என்ற இப்புத்தகம் இந்தப் பயணத்தில் உங்களோடு பயணிக்க விரும்புகிறது. 30க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த உங்களைப் போன்ற இளைஞர்கள் இதில் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். கிறிஸ்து நம்மை அழைக்கும் இலட்சியம் எவ்வளவு அழகான புதையல் என்பதை அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். எந்தவொரு மனிதக் கனவையும் விடப் மேலான ஒரு திட்டத்திற்கு உங்கள் இதயங்களைத் திறக்க இப்புத்தகம் அழைப்பு விடுக்கிறது. ஒரு நாள் மட்டும் அல்லாமல், வாழ்நாள் முழுவதற்குமான "ஆம்" என்ற அர்ப்பணிப்புக்கு இது ஆயத்தப்படுத்துகிறது - அது கடவுளின் அன்பைப் போல சோர்வில்லாத, நம்பிக்கையான ஒரு "ஆம்" ஆகும்.

நமது அன்புக்குரிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வழிகாட்டுதலால் ஈர்க்கப்பட்டு, இப்புத்தகத்தை வாசிக்கும் உங்களுக்காக நான் செபிக்கிறேன். இயேசு கிறிஸ்து உங்கள் இதயங்களில் கிளர்ந்தெழுந்து, அவரில் அமைதி காணும் வரை உங்களை வழிநடத்துவாராக. தூய ஆவியார் உங்களின் ஒளியாகவும் பலமாகவும் இருப்பாராக. மேலும், அழகிய அன்பின் அன்னையான மரியாயைப் போல நீங்களும் நம்பிக்கையோடும் துணிவோடும், அனைத்து அழைப்புகளிலும் மிகவும் அழகிய அழைப்பான - "அன்பிற்கான அழைப்பிற்கு" விடையளிக்க வாழ்த்துகிறேன்.

தமிழாக்கம் ஹெரால்டு

இயேசு அவர்களைக் கூர்ந்து நோக்கி, "மனிதரால் இது இயலாது. ஆனால், கடவுளால் எல்லாம் இயலும்" என்றார். மத்தேயு 19:26

உலக படைப்பின் பராமரிப்பு நாள் ஜெபம்



படைப்பின் பராமரிப்புக்கான உலக ஜெப நாளை முன்னிட்டு, கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் 'படைப்பின் நீதி அமைப்பின்' (Creation Justice Ministry), தலைவர் அருட்பணி ஆண்ட்ரூ மாணிக்கம் OFM Cap அவர்களின் தலைமையில், செப்டம்பர் 5 அன்று நெகிரி செம்பிலான், தம்பினில் உள்ள தூய ஜோன் மாரி வியான்னி தேவாலயத்தில் ஜெபம் மற்றும் தியானப் பட்டறையை ஏற்பாடு செய்திருந்தது.

ஆலய வளாகத்தில் உள்ள பாத்திமா அன்னை கெபியின் முன்பாக, திறந்தவெளியில் திவ்ய நற்கருணை ஆராதனை, நற்கருணை ஆசீர்வாதம் மற்றும் அதைத் தொடர்ந்து திருப்பலியும் நிறைவேற்றப்பட்டன.

அருட்பணி ஆண்ட்ரூ அவர்கள் தமது மறைவுரையில், கடவுளின் படைப்பைப் பாதுகாக்கும் பொறுப்பாளர்களாக நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையை நினைவூட்டினார். நாம் சிறந்த பொறுப்பாளர்களாக இருப்பதற்குப் பதிலாக, படைப்பை அழிப்பவர்களாக மாறியது மட்டுமன்றி, ஆபத்தான முறையில் நமது செயல்களின் விளைவுகளை அறியாமலும் உணராமலும் வாழ்கிறோம் என்று சுட்டிக்காட்டினார்.

"படைப்புக்கும் அதை உருவாக்கிய படைப்பாளருக்கும் எதிராகச் செய்யும் பாவமே 'சுற்றுச்சூழல் பாவம்' (Ecological Sin)" என்று சர்வதேச இறையியல் ஆணையம் வரையறுத்துள்ளதை அவர் எடுத்துரைத்தார். இத்தகைய பாவம் மறைமுகமாக நடைபெறுவதால், நமது அன்றாட முடிவுகளும் செயல்களும் படைப்பின் அழிவுக்கு எப்படி வழிவகுக்கின்றன என்பதை உணராமலேயே நாம் தவறு செய்யக்கூடும்; இது மிகவும் ஆபத்தானது என்றும் விளக்கினார்.

எனவே, இறைமக்கள் மத்தியில் உண்மையான ஒரு 'சுற்றுச்சூழல் மனமாற்றம்' (Ecological Conversion) தேவைப்படுகிறது. நம்முன் இருக்கும் பெரிய சுற்றுச்சூழல் சவால்களைக் கண்டு அஞ்சவோ, அல்லது நாம் செய்யும் சிறிய நற்செயல்களைப் பயனற்றவை என்று ஒதுக்கிவிடவோ கூடாது என்று அருட்பணி ஆண்ட்ரூ கேட்டுக்கொண்டார். ஏனெனில், மனிதர்கள் செய்த பல சிறிய தவறுகளின் திரட்சியே இன்றைய சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்குக் காரணம்; அதேபோல், நாம் செய்யும் பல சிறிய நற்செயல்களின் மூலமே நிலைமையைக் குணப்படுத்தி, படைப்பை மீண்டும் சீரமைக்க முடியும்.

நிறைவாக, இந்நிகழ்வில் பங்கேற்ற 22 பங்குகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கும், தத்தமது பங்குச் சமூகத்திற்கு எடுத்துச் செல்வதற்காக அருட்பணி சேவியர் ஆண்ட்ரூ அவர்கள் சிறிய செடிகளை வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

ஆண்டை முன்னிட்டு 'லா ரெபுப்ளிகா' (La Repubblica) என்ற இத்தாலிய நாளிதழுக்கு அளித்த பேட்டியில், கர்தினால் பிஸாபல்லா பேசுகையில், இஸ்ரேலியர்கள் மற்றும் பாலஸ்தீனியர்கள் இருதரப்பும் அந்த நாளின் வடுக்களால் இன்னும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

நம்பிக்கையின் ஒரு வெளிச்சம்

குளிர்காலம் நெருங்கி வரும் வேளையில், தற்காலிகக் கூடாரங்களில் வாழும் அகதிகளின் குடும்பங்கள் குறித்து கர்தினால் பிஸாபல்லா தனது கவலையை வெளிப்படுத்தினார். "மழை பெய்யத் தொடங்கினால், கூடாரங்களில் வாழும் அனைவருக்குமே அது ஒரு மிகப்பெரிய சவாலாக மாறும்," என்றார்.

இந்தக் கடுமையான இன்னல்களுக்கு மத்தியிலும், காசா பங்குச் சமூகப் பள்ளி மீண்டும் திறக்கப்பட்டது அந்த மக்களுக்கு நம்பிக்கையின் ஒரு வெளிச்சமாக அமைந்துள்ளது.

"பள்ளியை மீண்டும் திறந்தது ஒரு முக்கியமான அடையாளமாகும். அனைத்துக் இன்னல்களையும் தாண்டி, நாம் மீண்டும் புதிய தொடக்கத்தைக் காண விரும்புகிறோம்; நாம் நம்பிக்கையை இழந்துவிடவில்லை என்பதையே இது காட்டுகிறது. பள்ளி திறக்கப்பட்ட நாளில் அங்கு பெரும் மகிழ்ச்சி நிலவியது; எல்லாரும் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்," என்று கர்தினால் கூறினார்.

தமிழாக்கம் ஹெரால்டு

பங்கு குடும்பத் திருவிழா கொண்டாட்டம் 2026

நிபோங் திபால், பினாங்கு: "நானே திராட்சைக் கொடி, நீங்கள் அதன் கிளைகள்" (யோவான் 15:5) என்ற விவிலிய மையக் கருப்பொருளோடு, தூய அந்தோனியார் ஆலயப் பங்கு மக்கள் தங்களின் 'பங்கு குடும்பத் திருவிழா'வை செப்டம்பர் 20 அன்று சிறப்பாகக் கொண்டாடினர். இயேசுவே உண்மையான திராட்சைக் கொடி என்றும், நாம் அனைவரும் அதில் இணைந்து வாழும் கிளைகள் என்றும் இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது. அதேபோல, ஒரு குடும்பமும் ஒரு திராட்சைக் கொடி போன்றது; அதில் உள்ள உறுப்பினர்கள் அதன் கிளைகள் ஆவர். மரத்திலிருந்து முறிந்த ஒரு கிளையால் தானாக வளரவோ, வாழவோ, பூத்துக் குலுங்கவோ முடியாது. அது தன் வேரோடு இணைந்தே இருக்க வேண்டும். அதைப்போலவே, கடவுளோடு தொடர்பு இல்லாமல் மனிதர்களால் ஆன்மீக வாழ்வில் வளர முடியாது. ஒரு குடும்பத்தில் அனைவரும் தன்னிச்சையாகச் செயல்பட நினைத்தால், அக்குடும்பம் ஒருபோதும் தழைத்தோங்க முடியாது. நமக்கு ஒருவருக்கொருவர் உதவி தேவைப்படுகிறது. இந்த பரஸ்பர தேவையை உணர்ந்து கொள்வது, குடும்பத்திற்குள் தாழ்ச்சி, மன்னிப்பு மற்றும் ஒற்றுமையை உருவாக்கும்.

செப்டம்பர் 20 ஞாயிற்றுக்கிழமை, அருட்பணி மோன்சின்யோர் ஹென்றி ராஜ் அவர்களால் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பங்குச் சமூகத்தின் 13 அன்பியங்கள் (BECs) சிவப்பு, நீலம் மற்றும் மஞ்சள் என மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, திருப்பலியின் போது ஒன்றாக அமர்ந்தனர். இந்த திருப்பலியில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தனித்தனியாக முன்னோக்கி வந்து குருவிடம் தனிப்பட்ட ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டது மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது. குடும்பங்கள் தங்கள் இதயப்பூர்வமான காணிக்கைகளைக் கொண்டு வந்து பங்கு குடும்ப மரத்தின் அடியில் அன்போடு சமர்ப்பித்தனர். மேலும், குருவிடமிருந்து ஆசீர்வாதம் பெற்றபோது, இத்திருவிழாவிற்காகத் தயாரித்த சிறப்பு குடும்ப ஜெப அட்டை ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது. பங்கு குடும்பங்களின் ஒற்றுமைக்காகவும் அன்பிற்காகவும் மட்டுமே இந்த திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலிக்குப் பிறகு, பங்கு மக்கள் காலை உணவை முடித்துக் கொண்டு, அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றனர். பங்கு மக்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிறக் குழுக்களுடன் இணைந்துப் போட்டியிட்டு, ஒற்றுமையையும் குழு



உணர்வையும் வெளிப்படுத்தினர். அனைவருக்கும் மகிழ்ச்சியையும் சிரிப்பையும் தரும் வகையில் பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சிறிய குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் முழு ஆர்வத்துடனும் ஒத்துழைப்புடனும் பங்கேற்றனர். எதிர்பாராதவிதமாகப் பெய்த கனமழைகூட அவர்களின் உற்சாகத்தைக் குறைக்கவில்லை; மாறாக, அம்மழையைக் கடவுள் பொழிந்த ஆசீர்வதிக்கப்பட்ட அருளின் அடையாளமாகப் பார்த்து, நிகழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் மக்கள் மகிழ்ந்து அனுபவித்தனர். மதிய வேளையில், அன்பான மதிய விருந்துடன் இந்நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.

ஒரே குடும்பமாக ஒன்றுகூடிய பங்கு மக்களுக்கு இந்நாள் மறக்க முடியாத நாளாக அமைந்தது. ஏராளமான ஆசீர்வாதங்கள், சிரிப்பு, அன்பு மற்றும் சமூக மகிழ்ச்சியுடன் இக்கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நிறைவுற்றது.

ஜோசுவா ஜேக்சன் – நிபோங் தெபால்



கடவுளுக்கு உரியதைச் செலுத்துவோம்

எசா 45:1, 4-6; 1 தெசலோ 1:1-5; மத்தேயு 22:15-21

ஆண்டின் பொதுக்கால 29ஆம் ஞாயிறு

கடந்த ஞாயிற்றுக்கிழமைகளில், இறைவார்த்தைக்கு உரிய முக்கியத்துவத்தைக் கொடுக்காமல் ஆதாயம் தரும் புறப்பாட சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் யூத சமயத் தலைவர்களைக் கண்டித்து இயேசு பேசினார். கடவுளின் அன்பையும் இரக்கத்தையும் விட, சமயச் சட்டங்களையும் சடங்குகளையும் மனிதன் மீறுவதையே யூத சமயத் தலைவர்கள் கவனித்து வந்தனர். தங்களை இழித்துரைக்கும் இயேசுவை எப்படியாவது சிக்க வைத்து வீழ்த்துவதற்கு யூத சமயத் தலைவர்கள் இவ்வாரம் பொறி வைக்கின்றனர்.

முதல் வாசகத்தில், பாபிலோனிய அடிமை வாழ்விலிருந்து யூத மக்களுக்கு விடுதலை வழங்க, அந்நிய அரசன் சைரசுக்கு கடவுள் ஆற்றல் அளிக்கிறார் (எசா.45:1). இஸ்ரயேலின் கடவுளை அறியா சைரசுக்கு ஆற்றல் அளித்த அதே கடவுள், இயேசுக்கு எதிராக பொறி வைக்கும் யூதச் சமயத் தலைவர்களுக்கும் ஆற்றல் அளிக்கிறார். இயேசுவை போதகர் என்றும், உண்மையானவர் என்றும், நேர்மையானவர் என்றும் வருணிக்கும் யூதச் சமயத் தலைவர்கள், வில்லங்கமான கேள்வியைக் கேட்கின்றனர். "சீசருக்கு வரி செலுத்துவது முறையா? இல்லையா?" (மத்.22:17). தங்களைக் குறை கூறும் இயேசுவை பழிவாங்கும் வஞ்சக எண்ணத்தோடு அவர்கள் கேட்கும் கேள்விக்கு முறையே என்று சொன்னாலும், முறை இல்லை என்று சொன்னாலும் இயேசு சிக்கலில் சிக்கிக் கொள்வார்.

இயேசு முட்டுச் சந்துவில் நிறுத்தப்பட்டிருக்கிறார். இயேசுவை மடக்கி விட்டோம் என்ற இறுமாப்பில் யூதர்கள் நிற்கின்றனர். அவர்களின் தீய எண்ணத்தை அறிந்த இயேசு, "வரி கொடுப்பதற்கான நாணயம் ஒன்றை எனக்குக் காட்டுங்கள் என்றார் ... இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை என்று கேட்டார். அவர்கள், 'சீசருடைவை' என்றார்கள். சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்" என்றார் (மத்.22:19-21).

அவர்கள் வினவிய ஒரு வினாவுக்கு இயேசு இரண்டு விடைகளைத் தருகிறார். இயேசுவின் இந்த இரண்டு விடைகள் நமக்கும் இன்று பொருந்தும். சீசருக்கு (அரசாங்கம்) உரியவற்றைக் கட்டாயம் செலுத்த வேண்டும் என்பதற்கு சட்டம் இருக்கிறது. வரி செலுத்துவது ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள பொறுப்பு. கடவுளுக்கு உரியவற்றைச் செலுத்த நமக்கு ஏதேனும் கட்டாயம் இருக்கிறதா? சட்டம் இருக்கிறதா? கடவுளுக்கு உரியவற்றைத் தவறாமல் நாம் செலுத்துகிறோமா?

"எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" (மத்.28:19). திருஅவையில் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் நற்செய்தியை அறிவிக்கும் பொறுப்பும் கடமையும் உண்டு. அதற்காக ஆண்டவர் கொடுத்தக் கட்டளை இரண்டு. "உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து. உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" (மத்.22:37). இந்தப் பொன்னான கட்டளைகளோடு, நேர்மையாகவும் பரிவிரக்கமாகவும் பணிவாகவும் நடக்க வேண்டும் (மீக்கா6:8). இவ்வாறு செயல்பட்டால், எதுரைப் பணியை (Mission) மேற்கொள்கிறோம் எனப் பொருள்படும். கடவுளுக்கு உரியதைச் செலுத்தி விட்டோம் என்ற மனநிறைவு நமக்கும் ஏற்படும்.

அந்தோணி இன்னாசி, சைபர்ஜெயா

பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015